## நம்பிக்கையின் ஜெபம்

அன்புள்ள ஆண்டவராகிய இயேசுவே,

நீர் என்மேல் அன்பு கொண்டிருப்பதை நான் அறிந்திருக்கிறபடியால், உம்மிடம் வந்துள்ளேன். நீர் உயிரோடு இருக்கிறீர். இப் பிரபஞ்சத்தை ஆளுகை செய்பவரும் நீரே. நித்திய மரணத்திலிருந்து என்னை மீட்பதற்காக, நீர் இப்பூமிக்கு வந்து உமது உயிரைக் கொடுத்தீர். நீர் ஜீவிப்பதையும் நீரே என் ஆண்டவரும் என் இரட்சகரும் எனக்கு நித்திய ஜீவனை அளிப்பவரும் என விசுவாசிக்கிறேன். எனக்கு தீமை செய்யக்கூடிய எல்லா பிசாசின் கிரியைகளையும் நீர் தோற்கடித்துவிட்டீர் என நம்புகிறேன். நீர் என்னை நோய், தொற்றுக்கள், துன்பம், குழப்பம், அழிவுகளிலிருந்து விடுவித்து சமாதானம் தருகிறீர் என நம்புகிறேன்.

***[அன்புள்ள இயேசுவே,***

***இப்போது என்னை துன்பப்படுத்தும் விடயத்தை உம்மிடம் ஒப்புகொடுக்கிறேன்.***

**…………………………………………………………**
**…………………………………………………………**

***(உங்கள் பிரச்சனையை ஆண்டவரிடம் கையளியுங்கள்.)]***

என்னுடைய விண்ணப்பத்தை இப்போது ஏற்றுக்கொண்டமைக்கு நன்றி ஆண்டவரே. இப்போது நீர் எனக்கு ஆறுதலையும் மன நிம்மதியையும் தருவீர் என உறுதியாக நம்புகிறேன். எனது விண்ணப்பத்திற்கு நன்மையான பதிலை தருவதற்காக நன்றி ஆண்டவரே, ஏனெனில் உமது வார்த்தை கூறுகின்றது……

***ஒடுக்கப்படுகிற யாவருக்கும், கர்த்தர் நீதியையும் நியாயத்தையும் செய்கிறார்.***

***(சங்கீதம் 103:6)***

“அன்புள்ள ஆண்டவரே, உம்மை என்
ஆண்டவராகவும் இரட்சகராகவும்
ஏற்றுக்கொள்ளதேவையான பெலனையும்
தைரியத்தையும் தந்தருளும்.”

**நன்றி இயேசுவே ………………**

**நன்றி இயேசுவே ………………**

**நன்றி இயேசுவே ………………**

**ஆமென்.**

## ஒப்புக்கொடுத்தலின் ஜெபம்

அன்புள்ள ஆண்டவரே,

அண்ட சராசரங்களை உருவாக்கியவர் நீரே. நீர் படைத்த மனிதன் கீழ்ப்படியாமையினாலே நித்திய மரணத்திற்கு முகம் கொடுத்தான். ஆனாலும் அன்புள்ள தகப்பனே முழு மனித இனத்தின் பாவத்திற்காகவும் உமது ஒரே பேறான குமாரன் இயேசுக் கிறிஸ்து துன்புற்று பாவ நிவாரண பலியாக சிலுவையில் மரித்தார். மரணத்தை தோற்கடித்து மூன்றாம் நாள் உயிரோடு எழுந்தார். மேலும் உலகத்தில் உள்ள அந்தகார வல்லமைகளையும் பிசாசின் கிரியைகளையும் ஆண்டவரே இயேசுக் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே ஜெயம் கொண்டீர். எனவே ஆண்டவரே, இயேசு கிறிஸ்துவை நம்புகிறவனுக்கு பாவத்திலிருந்தும் விடுதலை உண்டு என விசுவாசிக்கிறேன்.

ஆண்டவராகிய இயேசுவே, இப்பொழுது நான் உமது பாதப்படிக்கு வருகிறேன். எல்லையற்ற பாவ சுபாவத்திலே நான் பிறந்ததினாலே பல பாவங்களை செய்துள்ளேன். நான் வளர்ந்த பிறகு சொல்லாலும் , சிந்தனையாலும் , செயலாலும் உமக்கு விரோதமாகவும் பிறருக்கு விரோதமாகவும் பாவம் செய்துள்ளேன். அன்புள்ள ஆண்டவராகிய இயேசுவே என்னை மன்னியும்.

(ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் முன்பாக, உமது வாழ்க்கையில் நீர் செய்த பாவங்களை உண்மையாக அறிக்கை செய்யவும்)

……………………………………………………………
……………………………………………………………

ஆண்டவராகிய இயேசுவே, எனக்கு விரோதமாக குற்றம் செய்தவர்களை மன்னிப்பதற்கு எனக்கு கடினமாக உள்ளது. நான் அவர்களை இன்னமும் வெறுக்கிறேன். அன்புள்ள ஆண்டவராகிய இயேசுவே எனக்கு விரோதமாக அவர்கள் செய்த சகல பாவங்களையும் மன்னியும்.

(அவர்கள் உமக்கு விரோதமாக செய்த சகல பாவங்களையும் மன்னிப்பதாக நேர்மையாக இயேசுவிடம் கூறுங்கள்).

……………………………………………………………
……………………………………..

அன்புள்ள ஆண்டவராகிய இயேசுவே என்னுடைய எல்லா பாவங்களையும் மன்னிப்பதற்காக நன்றி. நீரே என்னுடைய இரட்சகரும் கடவுளும் தொடர்ந்தும் நான் பாவம் செய்யாதப்படி எனக்கு உதவியருளும். உம்முடைய பிள்ளையாக என்னை ஏற்றுக்கொள்ளும். என்னை பாதுகாத்து வழிநடத்தியருளும்.

இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே இவற்றை வேண்டுகிறன். ஆமென்.

**SMS – 0716833489**
**விபரங்களுக்கு – 0112653959**
**(ஒவ்வொரு நாளும் இரவு 9 மணிக்கு பின்)**